**எண். 05 / 2010**
**மார்ச் –05–04– 2010.**

**செய்திக் குறிப்பு**

2010–11 ஆம் நிதியாண்டிற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசால் வழங்கப்பட வேண்டிய மானியம் ரூ.1652.43/– கோடி என தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயம் செய்துள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டண வீதத்தை விட குறைவான வீதத்தை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்யுமானால், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 65ஆம் பிரிவின்படி அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியம் வழங்க வேண்டும்.

வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு மின்கட்டண வீதத்தில் ஒரு பகுதி அதாவது, ஒரு யூனிட்டிற்கு 35 காசுகள் முதல் ஒரு யூனிட்டிற்கு ரூ.1.75 வரை உதவித் தொகை அளித்துவரப்பட்டுள்ளது. குடிசைவாசிகள் மற்றும் விவசாயிகளுக்கு முழுவதுமாக மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

மொத்த மானியத் தொகையில் 76 விழுக்காடான ரூ.1249/– கோடி வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மானியத்தொகையின் 13 விழுக்காடான ரூ.219/– கோடி விவசாய மின் உபயோகிப்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11 விழுக்காட்டுத் தொகையான ரூ.184/– கோடி குடிசை மின் உபயோகத்திற்காகவும், கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் மின் உபயோகத்திற்காகவும், தெருவிளக்குகள் மற்றும் பொது குடிநீர் வழங்கல் மின் உபயோகத்திற்காகவும், பொது வழிபாட்டிடங்கள் மின் உபயோகத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 65ஆம் பிரிவு மானியத்தை முன்னதாக வழங்குமாறு மாநில அரசை வலியுறுத்துகிறது. அவ்வாறு வழங்கத் தவறுமானால், மாநில ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டணம் பொருந்தக்கூடியதாகும். மானியத் தொகை கணக்கிடுதல் தற்போது உள்ள மின் கட்டண வீதத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் மின் கட்டண வீதத்தை மாற்றியமைப்பதற்காக மின் கட்டண மனுவை தாக்கல் செய்துள்ளது.

**(எம். வேலாயுதபெருமாள்)**
உதவி செயலாளர்